**In the Court of Judicial Magistrate No.I, Kovilpatti.**

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII, CrPC)

| | | |
|---|---|---|
| Case No. | : | STC No.98/2026 |
| Deposition of witness for Prosecution | : | P.W– 2 |
| Name | : | அய்யாராஜா, 51 |
| Father Name/Husband Name | : | சிவலிங்கம் |
| Village | : | கோவில்பட்டி |
| Taluk | : | கோவில்பட்டி |
| Calling | : | HOD |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 10th day of June 2026.

**(Accused absent. 355 BNSS petition filed and allowed).**

<u>முதல் விசாரணை</u>

1 நான் தற்போது கோவில்பட்டியில் வசித்து National engineering college ல் HOD வேலை செய்து வருகிறேன். அ.சா.1 யை தெரியும். என்னுடன் பணியாற்றும் சக பேராசிரியர். ஆஜர் இல்லாத எதிரியை தெரியும். எங்கள் கல்லூரியில் M.E. படித்துள்ளார். கடந்த 04.03.2024 அன்று மதியம் 02.15 மணிக்கு நான் எனது வகுப்பறையில் இருந்தபோது எனது துறை உதவியாளர் பால்ராஜ் எனக்கு போன் செய்து எங்கள் கல்லூரி மாணவர் எதிரி, அ.சா.1 யை அடித்து விட்டதாக சொன்னார். நான் உடனே எனது வகுப்பறையிலிருந்து அ.சா.1 ன் ரூம்க்கு சென்றேன். அப்போது எதிரி வெளியே நின்று கொண்டிருந்தார்.

2 நான் என்ன நடந்தது என்று அ.சா.1 விடம் கேட்டதற்கு அ.சா.1 Project incharge, அந்த Project review சம்பந்தமாக ஆலோசனை செய்ய மூன்று மாணவர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கி கொண்டிருந்ததாகவும், அப்போது உடன் இருந்த கபிலன், சக்கரவர்த்தி ஆகிய மாணவர்கள் அறிவுறுத்தல் பெற்ற பிறகு ரூம்க்கு வெளியே நின்று கொண்டிருந்ததாகவும், எதிரி மட்டும் வெளியே வந்துவிட்டு திரும்ப உள்ளே சென்று அ.சா.1 யை அடித்துள்ளார். உடனே மேற்படி இரண்டு மாணவர்களும் எதிரியை பிடித்துக் கொண்டுள்ளார்கள். அருகிலிருந்து வந்த கல்லூரி பேராசிரியர்கள் சுடலையாண்டி, ஜெயவெங்கடேஷ் ஆகியோர்கள் வந்து எதிரியை சத்தம் போட்டு வெளியே நிறுத்தி வைத்தார்கள்.

3 நான் வந்த எதிரியை சத்தம் போட்டு விட்டு அவரின் பெற்றோருக்கு போனில் தகவல் சொன்னேன். மதியம் 03.30 மணிக்கு மேல் எதிரியின் தந்தை வந்தார். பின்பு எதிரியின் தந்தையிடம் விவரத்தை சொல்லி எதிரியை அழைத்து செல்லுமாறு சொன்னோம். இதற்கிடையில் மதியம் 02.30 மணிக்கு நான் கல்லூரி முதல்வரிடம் தகவல் சொன்னேன். முதல்வரின் அறிவுறுத்தலின் பேரில் கல்லூரியின் நிர்வாகத்திடம் தகவல் சொல்லி மாலையில் அ.சா.1 காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். என்னிடம் காட்டப்படும் புகார்மனுவில் உள்ள அறிவேன் சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். போலீசார் இது சம்பந்தமாக என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

4 அ.சா.1 கொடுத்த புகார் கல்லூரி நிர்வாகத்தின் அறிவுறுத்தலின் பேரில் கொடுக்கப்பட்டது, நாங்கள் தாமாக கொடுக்க முடியாது. அ.சா.1 கொடுத்த புகார்மனு கல்லூரியின் நிர்வாகம் மூலம் காவல் நிலையத்திற்கு கொடுக்கப்படவில்லை என்றால் சரிதான், கல்லூரியின் நிர்வாகத்தின் அறிவுறுத்தலின் பேரில் கொடுக்கப்பட்டது. சம்பவ இடத்தில் சிசிடிவி காமராக்கள் கிடையாது என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் சொன்னது போல் எந்த சம்பவமும் கேள்விபட்டு தெரிந்து கொள்ளவில்லை என்றாலும், எதிரி எந்த குற்ற சம்பவத்தில் ஈடுபடவில்லை என்றாலும், நான் எதிரியை கண்டிக்கவில்லை என்றாலும், எதிரியின் தந்தைக்கு தகவல் சொல்லவில்லை என்றாலும் சரியல்ல. அ.சா.1 என்னுடன் பணிபுரியும் சக பேராசிரியர் என்பதால் அவருக்கு வேண்டி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரி, அ.சா.1 யை தாக்கியதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**

Taken before me in open court in the presence of accused and read over to the witness and acknowledged by him/her to be Correct.

Sd/ Tr. K. Anand, B.A, M.L.,
Judicial Magistrate No.1,
Kovilpatti.